CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# புர்க்காக்கள் மற்றும் மத்ரஸாக்கள் மீதான உத்தேசத் தடைகுறித்த ஊடக அறிக்கை

***2021 மார்ச் 18, கொழும்பு, இலங்கை:*** புர்க்கா அணிவதையும், தேசியக் கல்விக்கொள்கைக்கு இணங்காத மத்ரஸாக்களையும் தடைசெய்வதற்கு அரசாங்கம் எண்ணுவதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர செய்த பகிரங்கக் கூற்று குறித்த செய்தி அறிக்கைகள் சம்பந்தமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) கவலையடைந்துள்ளது. புர்க்காக்கள் மற்றும் மத்ரஸாக்கள் சம்பந்தமான கொள்கை ஜனநாயக விழுமியங்களுக்கும், அரசியலமைப்பும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகுறித்த சர்வதேசப் பொருத்தனையும் (ICCPR) உத்தரவாதமளிக்கும் வெளிப்படையான உரிமைகளுக்கும் இணக்கமாக நிலைமாற்றமின்றி வகுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படவேண்டிய நிலைமையிலான அரசாங்கக் கொள்கைகுறித்த அமைச்சரின் கூற்று பதில்களைவிடக் கூடுதலான வினாக்களையே எழுப்புவதாக உள்ளது.

தேசியப் பாதுகாப்பு அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பு மற்றும் சட்டநிலைத்தகவுள்ள இலக்கு என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளுகின்றோம். இதற்காக, தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின்கீழ் அடிப்படை மனித உரிமைகளும், மட்டுப்படுத்தப்படலாம். எவ்வாறாயினும், எமது அரசியலமைப்பு மற்றும் ICCPR இன் கீழான சர்வதேசக் கடப்பாடுகள் என்பவற்றின் நியதிகளின் பிரகாரம் சட்டநிலைத்தகவுள்ள தேசியப் பாதுகாப்பு நோக்கங்கள் காரணமாக ஏதாவது அடிப்படை உரிமைகள் மட்டுப்படுத்தப்படுவது சட்டத்தின் காலவிதிப்புக்கு உட்படுதல் வேண்டும். அது தவிர்க்கப்படவேண்டிய தீங்குடன் ஒப்புநோக்காக நேர்விகிதாசாரங்கொண்டதாகவிருத்தலும் வேண்டும்.

அறிக்கையிடப்பட்ட அமைச்சரின் கருத்துக்குறிப்புகள் தடைகள் சட்டவழிமுறைகள் மூலம் எவ்வாறு காலவிதிப்புப் பெறும் என்பதையும் குறித்துரைக்கவில்லை. அமைச்சரவை அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள வரைபு அமைச்சரவைப் பத்திரத்தில் அமைச்சர் கையொப்பமிடுவது அல்லது அமைச்சரவை அத்தகைய பத்திரத்துக்கு அங்கீகாரமளிப்பது அடிப்படை உரிமைகளுக்கு மட்டுப்பாடுகளை விதிக்கும் நோக்கத்தில் சட்டமாகிவிடாது.

ICCPR இன் சர்வதேச ஒப்பந்த அமைப்பாகிய மனித உரிமைகள் குழு 2018 இல் இடம்பெற்ற இரண்டு முக்கிய வழக்குத்தீர்ப்புகளில் (Yaker v France and Heddadj v. France) முஸ்லிம்களின் உடைகள் விடயத்தில் கொண்டுவரப்படும் பொதுவான தடைகள் ICCPR வழங்கும் பாதுகாப்பு நியமங்களுடன் தொடரிணக்கம் கொண்டவையல்லவென்று தீர்மானித்துள்ளது. மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தினால் இந்த வழக்குகளின் தொகுப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட

பின்வரும் விடயம் இலங்கை எதிர்நோக்கும் இயைபுள்ள விவகாரங்களைத் தெளிவுபடுத்துகின்றது.

> பிரெஞ்சுச் சட்டத்தினால் அறிமுகஞ்செய்யப்பட்ட பகிரங்மாக நிக்காப் அணிவது மீதான பொதுவான குற்றவியல் தடை தமது மத நம்பிக்கைகளை வெளிப்படுத்தும் மனுதாரர்களின் உரிமைக்குத் தீங்கு விளைவிக்கின்றது என்பதை இக்குழு கண்டறிந்தது. இந்த உடையை ஏன் தடைசெய்ய வேண்டுமென்பதற்கு பிரான்ஸ் போதிய விளக்கம் அளித்திருக்கவில்லை. முகத்தை மூடுவதைத் தடைசெய்வது அவசியமென்றும், ஒரு பாதுகாப்பு நிலைப்பாட்டிலிருந்து அல்லது சமூகத்தில் ''ஒன்றாக வாழும்'' குறியிலக்கை ஈட்டிக்கொள்ள இது அவசியமென்றும் பிரான்ஸ் விடுத்த கோரிக்கையைக் குழு ஏற்கவில்லை. அரசுகள் குறித்துரைப்பான சூழ்நிலைகளின் அடையாளம் காணும் நோக்கத்துக்காகத் தனிமனிதர்களிடம் தமது முகத்தைக் காண்பிக்குமாறு வேண்டிக்கொள்ளலாம் என்பதை ஏற்றுக்கொண்டது. ஆயினும், நிக்காப்மீதான இந்தப் பொதுவான தடை இந்த நோக்கத்தைப் பொறுத்தவரையில் மிகவும் எல்லைமீறியது என்று இக்குழு எண்ணியது. இத்தடை முகத்திரையிடப்பட்ட பெண்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, அவர்களை வீடுகளைவிட்டு வெளியில் செல்லவிடாமல் தடுக்கும் நேரெதிரான விளைவுக்கு இட்டுச்செல்லக்கூடுமென்றும், அவர்கள் பொதுச்சேவைகளைப் பெற்றுக்கொள்வதைத் தடுத்து அவர்களை ஓரங்கட்டக்கூடுமென்றும் குழு முடிவுசெய்தது.

இதிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரினால் தெரிவிக்கப்பட்டவாறான புர்க்காக்கள் குறித்த கொள்கை முதல் தோற்ற அளவில் இலங்கையின் ICCPR இன் கீழான சர்வதேச ஒப்பந்தக்கடப்பாடுகளின் மீறல் என்பது பெறப்படுகின்றது. கொள்கையில் அதிகரித்த துல்லியத்தன்மை இல்லாதநிலையில், ஒரு மத சமூகத்துக்குப் பாரபட்சமிழைக்கும் வகையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்குத் தேசியப் பாதுகாப்பு என்னும் அனைத்துமடங்கும் நியாய விளக்கத்தை வழங்கமுடியாது. அத்தோடு, கொவிட் 19 வைரசுக்கெதிராகப் பாதுகாப்பு முகக்கவசங்கள்குறித்த தற்போதுள்ள உத்தியோகபூர்வ தேவைப்பாடுகள் இருக்கும்வேளையில் புர்க்காக்கள் மீதான உத்தேசத் தடையை எவ்வாறு கோரமுடியுமென்பது தெளிவாகவில்லை. இது மதப்பாரப்பட்சத்துக்கு மேலதிகமாக வெளிப்படையான, சட்டரீதியாகப் பொருந்தாத, பொருளற்ற நிலையையும் உருவாக்குவதாகும்.

இவ்வாறே, மத்ரஸாக்கள் விடயத்திலும் தேசியக் கல்விக் கொள்கையின் ஒழுங்குபடுத்தல் சட்டகத்தினுள் அல்லாது மத்ரஸாக்களில் மதக்கல்வி வழங்க அனுமதிக்கப்படுவது சம்பந்தமான போட்டியிடும் சிந்தனைகளை CPA அறிந்துள்ளது. எவ்வாறாயினும், மத்ரஸாக்கள் தொடர்பானவை உள்ளிட்டவகையிலான கல்விக்கொள்கை தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சு மற்றும் நிறுவனங்களாலன்றி, மேலும் பொருத்தமானவகையில் கல்வி அமைச்சினாலேயே வகுக்கப்படுதல் வேண்டும். தேசியப் பாதுகாப்புத் தார்ப்பரியங்கள் காணப்படும் அளவுக்கு அவை சாதாரண தேசியக் கல்விக்கொள்கை நியமங்களுக்கு விசேடமான புறநடையானவை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு, மீண்டும் அந்த நோக்கங்களுக்கு அவசியமான அளவுக்கும், விகிதாசார முறையிலும் மாத்திரமே அது இடம்பெறுதல் வேண்டும். தேசிய பாதுகாப்பு முகவர் நிலையங்களைக் கல்விக்கொள்கைகளைத் தீர்மானிப்பவர்களாக அனுமதிக்கும் அல்லது அனுமதிக்கும் சாத்தியம்கொண்ட எந்தக் கொள்கையும், தனது பாதுகாப்பைப்போலவே தனது சுதந்திரத்தையும், பல்வகைமையையும் மதிக்கும் ஒரு ஜனநாயக சமூகத்துடன் தொடரிணக்கம் கொண்டதாக அமையமுடியாது. குறிப்பாக, இஸ்லாமிய விடயவாசகங்களின் வியாக்கியானம் போன்ற விசேடித்த அறிவு தேவைப்படும் விடயங்கள் குறித்த மதிநுட்பத் தீர்ப்பு பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளிலுள்ள

தீர்மானம் மேற்கொள்ளுவோருக்கு உரிய ஒன்றல்ல என்பதை நாம் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

மேலும், புர்க்காக்கள் மற்றும் மத்ரஸாக்களைத் தடைசெய்யும், மட்டுப்படுத்தும் அல்லது ஒழுங்குவிதிப்படுத்தும் விடயத்தைச் சுற்றியுள்ள விவகாரங்கள் மிகவும் சிக்கலானவை என்பதையும், அவை ஒரு ஜனநாயக சமூகத்தின் சட்டநிலைத்தகவுள்ள கருத்து வேறுபாட்டுக்கான விடயப்பொருள் என்பதையும் CPA அவதானிக்கின்றது. இலங்கையில், இத்தகைய வேறுபாடுகளும், விவாதங்களும் பரந்த சமூகத்தில் காணப்படுவதுபோலவே, முஸ்லிம் சமூகத்தினுள்ளும் காணப்படுகின்றன. நீண்டகாலமாக நிலைத்திருக்கும் ஜனநாயகம் என்றவகையில், நாம் அரசியல் நிறுவனங்களூடாகவும், சிவில் சமூகத்தினுடாகவும் இத்தகைய வேறுபாடுகளின் பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் காத்துக்கொள்ளும் வகையில் சமாதானமாகவும், மரியாதையுடனும் தீர்த்துக்கொள்வது சாத்தியமாகும்.

இப்போட்டியிடும் சகல ஜனநாயகச் சிந்தனைகளுக்கும் பொருத்தமான கவனம்செலுத்தும் ஒரு கொள்கை அரசியலமைப்பு உரிமைகளுடனும், சர்வதேச சட்டத்துடனும் தொடரிணக்கம் கொண்டதாகும் என்பதோடு, எமது பன்மைத்துவச் சமூகத்தின் சாத்தியமான மிகப்பரந்த இயைபுள்ள நலன்களின் கலந்தாலோசனையின் அடிப்படையில் அமைவதாகவும் விளங்கும். இத்தகைய ஒரு கொள்கை இப்பன்முகச் சவாலுக்கான முதல் பிரதிவிளைவாக, அல்லது ஒரேயொரு பிரதிவிளைவாக அமையும் வகையிலான, அரசின் தேசியப் பாபதுகாப்பு முகவர் நிலையங்களினூடாக இடம்பெறும் வற்புறுத்தல் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கும் முட்டாள்தனமான ஒன்றாக அமையமாட்டாது.